(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES UNDER PREVENTION OF CORRUPTION ACT, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case Number | : | Spl.C.C.No.1/2015 |
| Deposition Of Witness for | : | PW16 |
| Name | : | **திரு.மோகன்** |
| Father's Name | : | திரு.கொண்டப்பநாயுடு |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **11th December 2025.**

(எதிரிகள் நீதிமன்றத்தில் முன்னிலையாவதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. It is recorded as directed by the **Hon'ble High Court, Madras vide R.O.C.No.65929-A/2022/F1, P.Dis.No.17/2023 dt.23.01.2023. இந்நீதிமன்றத்திற்கு Prevention of Corruption(Amendment) Act, 2018 பிரிவு 22(c) ன் கீழ் வழங்கப்பட்டிருக்கும் அதிகாரத்தின் அடிப்படையில் இந்த சாட்சி விசாரணை எதிரி தரப்பு வழக்கறிஞர் நீதிமன்றத்தில் ஆஜராகாத நிலையில் இச்சாட்சியை குறுக்கு விசாரணை செய்வதற்கான உரிமை பாதிக்கப்படாத வகையில் பதிவு செய்யப்படுகிறது.)**

சாட்சி ஆஜர். சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

<u>**முதல் விசாரணை**</u> :

1. நான் தற்போது சென்னை, குரோம்பேட்டில், சங்கர் நகரில் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். எனது சொந்த ஊர் திண்டுக்கல், ஆரம்காலனி ஆகும். திண்டுக்கல் புவனேஸ்வரி டெக்ஸ்டைல்ஸ் Pvt.ltd என்ற நிறுவனமானது தாடிக்கொம்பு என்ற ஊரில் இயங்கி வந்தது. நான் கடந்த 1971 முதல் 2018 டிசம்பர் வரை அங்குதான் பணிபுரிந்தேன். ஆரம்பத்தில் கிளார்க்காக பணியில் சேர்ந்து பொதுமேலாளராக பணிஒய்வு பெற்றேன்.

2. 01.08.2012 ம் தேதி சிவகங்கை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளரிடமிருந்து தபால் வந்தது. அந்த கடிதத்தில் புதுக்கோட்டை மாவட்டம், தோட்டக்கலைத்துறை முன்னாள் உதவி இயக்குநர் திரு.K.சண்முக சுந்தரம் என்பவர் மீதான வழக்கு குறித்து கேட்கப்பட்டது. கடந்த 26.08.1999 ல் மதுரை ARS Auto LTD கம்பெனியில் அம்பாசிடர் காரை எங்கள் நிறுவன பயன்பாட்டிற்காக வாங்கப்பட்டது. அந்த வாகனத்தின் TN 57 D 2835 என்ற வாகனமானது ரூ.4,95,521/-க்கு வாங்கப்பட்டது. மேற்படி வாகனத்தை கடந்த ஜீலை 2001-ல் சண்முக சுந்தரம் அவர்களின் மனைவி திருமதி.பாக்கியலட்சுமி என்பவருக்கு

ரூ.2,25,000/- க்கு விற்கப்பட்டது. மேற்படி விபரத்தை எங்களது அலுவலக கடிதத்தின் மூலமாக கடந்த 21.08.2018 அன்று ஊ.த.க பிரிவு போலிசாருக்கு தெரிவித்து கடிதம் அனுப்பி வைத்தேன். விற்பனைத்தொகையை எங்களது வங்கி கணக்கிற்கு காரை வாங்கிய பாக்கியலட்சுமி என்பவர் வங்கி மூலமாக செலுத்தியுள்ளார். எங்களது நிறுவனத்தின் வங்கி கணக்கு தமிழ்நாடு மெர்கன்டைல் பாங்க், சேமிப்பு கணக்கு எண்.400675 ஆகும். என்னிடம் காண்பிக்கப்படும் தபாலில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த கடிதத்தினை நான்தான் தயார் செய்து காவல் ஆய்வாளருக்கு அனுப்பி வைத்தேன். அந்த **கடிதம் அ.த.சா.ஆ.46** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இவ்வழக்கு தொடர்பாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**(எதிரி தரப்பு வழக்கறிஞர் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகாததால் எதிரி தரப்பு குறுக்கு விசாரணைக்காக இவ்வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)**

"Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct"

ANITHACHRISTY J

Digitally signed by ANITHACHRISTY J
Date: 2025.12.11 15:52:22 +0530

**Special Judge,**
P.C.ACT Cases,
Sivagangai.